## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

# 1992 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, அட்டாளைச்சேனை, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டம்

*[1992, நவெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1992 நவெம்பர் மாதம் 06 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

1992 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, அட்டாளைச்சேனை, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டம்.

[1992, நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

எல். டீ. —ஓ. 7/88

## அட்டாளைச்சேனை, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

"கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியோடு சம்பந்தப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இலங்கையிலுள்ள அட்டாளைச்சேனையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருக்கின்றதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றி கொண்டுநடாத்தியுள்ளதாதலாலும்; அத்துடன் கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் முகாமைச் சபை கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, அட்டாளைச்சேனை, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கல்லூரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டாளைச்சேனை, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் அலுவல்களை இதுவரை முகாமைசெய்தும் கொண்டுநடாத்தியும் வந்தவர்களான ஆட்களும் இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்க இத்தால் தாபிக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபைக்கு இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அட்டாளைச்சேனை, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றுவதற்குமான முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவன என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் சமய, கல்வி, சமூக, பொருளாதார பண்பாட்டு அபிவிருத்தியை மேம்படுத்துதல்;

(ஆ) அரபு மொழியில் பூரண அறிவையும், ஆற்றலையும், திறனையும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதனை இயலச்செய்யும்வண்ணம் அரபு மொழி, அதன் இலக்கணம், இலக்கியம், உரைநடை, கவிதை வேறு ஒத்தபாடங்கள் என்பனவற்றைப் போதித்தலை ஊக்குவித்தல் ;

(இ) 'பிக்ஹு', 'தப்ஸீர்', 'ஹதீஸ்' என்பவற்றிற்கிணங்க 'ஷரீஅத்' அல்லது இஸ்லாமிய சட்டக்கோவையைப் போதித்தலை மேம்படுத்தல் ;

(ஈ) அல்குர்ஆனை 'தஜ்வீத்' முறைப்படி ஓதல், அல்குர்ஆனை மனனமாக ஓதும் 'ஹிஃபுதுல் குர் ஆன்' என்பவற்றைப் போதித்தலை ஆதரித்து ஊக்கப்படுத்தல் ;

(உ) பந்தி (ஆ), (இ), (ஈ) ஆகியவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களுள் ஏதேனும் ஒன்றில் அல்லது பலவற்றிலும் நுட்பமான அறிவினை மாணவர்கள் பெற்றுக்கொள்ளுவதற்கு உதவுகின்றவையான அரபுமொழியில் உள்ள இதனையொத்த வேறு பாடங்களைப் போதித்தலை ஊக்குவித்தல் ;

ஆயின், எவ்வாறாயினும் பந்திகள் (ஆ), (இ), (ஈ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்படும் விடயங்கள் புறநீங்கலாக "சுன்னத் வல்ஜமாஅத்" என்பதற்கிணங்க மட்டுமே கல்லூரியில் படிப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) மேற்படி குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதன் இடைநேர்விளைவானவையும் அல்லது எய்துவதற்கு உகந்தமானவையும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு முரணாக இல்லாதனவையுமான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.**

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அல்லது உசிதமான வாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்தில் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும், சேகரிப்பதற்கும், கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்திடம் உரித்தாக்கப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் கொள்ளப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியின்மீது ஏதேனும் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

**கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.**

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு அவற்றிற்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்டமைந்த முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்றவர்களான கல்லூரியின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் விதிகள்.**

6. (1) உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் அத்துடன் அதில் சமுகமாகவிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குகள்மூலமும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அத்தகைய விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டவிடத்து, அதே போன்ற ஒரு கூட்டத்தில் அதேமுறையில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், அவற்றுடன் சேர்க்கப்படலாம் அல்லது அவை நீக்கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கின்றவையான கல்லூரியின் விதிகள் அவை இச்சட்டத்துடன் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்துடன் ஒவ்வாதனவாகவிராத வரையில் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

கல்லூரியினால் கொடுக்குமதியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தற்படற்பாலனவுமான தனிசுகள்.

7. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று கல்லூரிக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் கல்லூரிக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்கெனக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு மூலமாகவோ வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைய நோக்கிற்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க அல்லது கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் அதனைக் கையுதிர்க்க உள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பணங்களையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.

9. கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன்பாகம் எதுவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கிலாபமாக, கடனுகை, மிகையூதியமாக அல்லது வேறுவகையில் எவ்விதத்திலும் இலாபம் என்ற வகையாக கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடுகள்—

(அ) கூட்டுத்தாபனத்துக்கு ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு நியாயமானதும் தகுந்ததுமான ஊதியம் நல்லெண்ணத்துடன் செலுத்தப்படுவதையும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவர் பங்குதாரராக இருக்கும் ஏதேனும் கம்பனியால் கூட்டுத்தாபனத்திற்கு வாடகைக்கு விடப்பட்ட எவையேனும் வளவுகளும் நியாயமானதும் தகுந்ததுமான வாடகை செலுத்தப்படுவதையும்; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால் அல்லது ஊழியரால் அவரது பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லது புரிகையில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதில், முகாமைச்சபையின் முன் அங்கீகாரத்துடன், உறப்பட்ட நியாயமானவையும் தகுந்தவையுமான செலவுகள் மீளளிக்கப்படுவதை அல்லது மீளச் செலுத்தப்படுவதை,

தடைசெய்தல் ஆகாது.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.**

10. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையில் அன்றி எத்தன்மைத்தான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாகச் சாதனத்தில் தங்கள் பெயரை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒப்பம் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

**குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.**

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிட்டவர்களும் அவர்கள்மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவல பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா